# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.49 (L.W.79)

| | | | |
|---|---|---|---|
| Name | மும்மூர்த்தி | Caste | - |
| Father's Name | - | Calling | Sub Judge |
| Village | | Religion | |
| Taluk | Trichy | Age | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.03.2025.

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.21 P.M.**

நான் தற்போது திருச்சி சார்பு நீதிபதியாக மோட்டார் வாகன இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் சிறப்பு சார்பு நீதிபதியாக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வேலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் நீதித்துறை நடுவராக கடந்த 2012 முதல் 2015 வரையிலான காலத்தில் பணியில் இருந்தேன்.

அப்போது வேலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 5 நீதிமன்றத்தில் பொறுப்பு நடுவராக பணியில் இருந்தேன். கடந்த 27.06.2015 அன்று நான் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 5 பொறுப்பு நீதிபதியாக பணியில் இருந்தபோது பள்ளிக்கொண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015–ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல்

அறிக்கையின்படி இறந்துபோன ஷமீல் பாஷா என்பவரை உரிய சடலக்கூராய்வு செய்து இறந்த நபரின் உண்மையான இறப்பின் காரணம் அறியும் பொருட்டு மாண்புமிகு வேலூர் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் 1824/2015 நாள் 27.06.2015–ன்படியான செயல்முறை ஆணை அது அ.த.சா.ஆ.69. அன்றைய தினம் சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சென்று அன்றைய தினம் மாலை 04.15 மணி முதல் 05.15 மணி வரை சென்னை அரசு இராஜவ் காந்தி பொது மருத்துவமனையில் சாட்சிகள் ஷாஜஷான், ஹமாயூன், பாஷா மற்றும் அப்துல் ரகுமான் ஆகியோரின் முன்னிலையில் பிரேத விசாரணை செய்யப்பட்டது. உரிய வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினம் மேற்படி பிரேத விசாரணை செய்ய மாலை 05.00 மணிக்கு பணி மருத்துவரால் பிரேதம் அடையாளப்பட்டுத்தப்பட்டது. பின்பு உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு சவக்கிடங்கில் இருந்த பிரேதம் சவக்கிடங்கிற்கு வெளியே உள்ள வராண்டாவிற்கு பின்புறம் மேற்படி பிரேத விசாரணை நடத்தப்பட்டது. மேற்படி பிரேத விசாரணையின்போது சவத்தின் வலது கை முட்டியில் காயங்களும் வலது கை உள்ளங்கையில் காயமும், வலது பக்க மார்பில் வீக்கமும், இடது இடுப்பில் கன்றிய காயமும், இடது பக்க முதுகில் கன்றிய காயமும், வலது தோள்பட்டையில் கன்றிய காயமும், வலது பக்க அக்குலில் காயமும் காணப்பட்டது. அப்போது நடந்த பிரேத விசாரணயை தொடர்ந்து மேற்படி பிரேத்தின் மீது சட்டம் சார்ந்த மருத்துவர்களால் உரிய சடலக்கூராய்வு செய்யும் பொருட்டு பேராசிரியர் மற்றும் இயக்குநர் சட்டம் சார்ந்த மருத்துவத்துறை சென்னை

மருத்துவக்கல்லூரி அவர்களுக்கு மேற்படி சடலக்கூராய்வு செய்வதற்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோள் கடிதம் அ.த.சா.ஆ.70. எனது பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.71.

எனது விசாரணையின்போது ஷமீல் பாஷா என்பவரின் மாமனாரான கௌஷ் பாஷா என்பவரிடமும் அவரது தகப்பனாரான ஷாஜஹான் என்பவரிடமும் அவரது உடன் பிறந்த சகோதரியான ருபைதா பர்வின் என்பவரின் கணவரான ஹிமாயூன் என்பவரிடமும் இறந்தவரின் சித்தப்பாவான பாஷா மற்றும் இறந்துபோன ஷமீல் பாஷாவின் உடன் பிறந்த சகோதரி ஹாஜி என்பவரின் கணவர் அப்துல் ரகுமான் என்பவரிடமும் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் முறையே அ.த.சா.ஆ.72 (ஐந்து நபர்களது வாக்குமூலம்).

உரிய நடைமுறைகளுக்கு பிறகு பிரேதமானது பள்ளிக்கொண்டா காவல் நிலைய தலைமைக் காவலர் திரு.அனுமந்தன் என்பவரிடம் பிரேதம் ஒப்படைக்கப்பட்டது. அதற்கான மரண அறிக்கை அ.த.சா.ஆ.73. அது கார்பன் காபி என்பதால் அது எதிரிகள் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. அது குறித்து வழக்கின் இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்.

அதன் பிறகு கடந்த 15.07.2016 அன்று ஷமீல் பாஷா என்பவரின் இறப்பு குறித்து பவித்ரா என்வரின் தாயாரான செந்தாமரைச்செல்வி என்பவரிடம் உரிய நடைமுறைகளை பின்பற்றி வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த வாக்குமூலம் அ.த.சா.ஆ.74. அதன் பிறகு நான் பணி மாறுதல் அடைந்ததால் ஆவணக்கோப்புகள் அனைத்தும் அதன் பிறகு வந்து நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: எந்த தேதி வரை நீதித்துறை நடுவராக வேலூர் நீதித்துறை நடுவர் எண் 1–ல் பணியாற்றினீர்கள் என்றால் ?

பதில்: 02.09.2015 வரை வேலூர் நீதித்துறை நடுவர் எண் 1–ல் பணியில் இருந்தேன்.

கே: தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் 27.06.2015 அன்று எனக்கு உத்தரவிட்ட நிலையில் அது எத்தனை மணிக்க எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் ?

ப: 27.06.2015 அன்று நண்பகல் 12.20 மணிக்கு என்னால் பெறப்பட்டது.

கே: பள்ளிக்ளெகாண்டா காவல் நிலைய குற்ற எண் 158/2015 முதல் தகவல் அறிக்கையை JM5 நீதிமன்றத்தில் எப்போது பெற்றேன் என்றால் ?

ப: 27.06.2015 அன்று அதிகாலை 03.15 மணிக்கு பெறப்பட்டது.

கே: முதல் தகவல் அறிக்கையை பெறுவதற்கு முன்பே CJM எனக்கு உத்தரவிட்டார் என்றால் ?

ப: சரியல்ல.

கே: முதல் தகவல் அறிக்கையில் நீதிமன்ற முத்திரை எந்த தேதியில் போடப்பட்டுள்ளது என்றால் ?

ப: 01.09.2016 அன்றுதான் நீதித்துறை நடுவர் எண். 5 அலுவலக தேதி முத்திரை போடப்பட்டுள்ளது.

கே: முதல் தகவல் அறிக்கையை நகல் CJM அவர்களுக்கு எப்போது கொடுத்தார் என்றால் ?

ப: அதைப்பற்றி எனக்கு தெரியாது. ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்துடன் நேரடியாக அனுப்பியிருப்பார்.

கே: முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு போடப்பட்டுள்ளது என்றால் ?

ப: 27.06.2015 அன்று அதிகாலை 12.15 க்கு முதல் தகவல் அறிக்கை போடப்பட்டுள்ளது.

கே: முதல் தகவல் அறிக்கையை யார் போட்டுள்ளார்கள் என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி அவர்கள் போட்டுள்ளார்.

கே: குற்ற எண் 158/2015 உள்ள புகாரை நான் பார்த்துள்ளேனா என்றால் ?

ப: என்னுடைய விசாரணையின்போது நான் பார்த்தேன்.

கே: புகார் யாருக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது என்றால் ?

ப: ஆம்பூர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது.

கே: அந்த புகாரை ஆம்பூர் துணை கண்காணிப்பாளர் யாருக்காவது Forward செய்துள்ளாரா ?

ப: இல்லை.

கே: டிஎஸ்பி அலுவலகத்தில் முத்திரை அந்த புகாரின் உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமியிடம் அந்த புகார் எத்தனையாவதாக பெறப்பட்டது என்று கேட்டீர்களா ?

ப: இல்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி முதல் தகவல் அறிக்கையை உங்களிடம் கொடுத்தவுடன் அவர் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தாரா என்று கேட்டீர்களா?

ப: அவ்வாறு கேட்பதில்லை.

கே: 01.07.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் திரு. கோவிந்தசாமி அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பிய அறிக்கையில் 17 ஆவணங்கள் உள்ளன. அதில் வரிசை எண் 16ல் அலி அக்பர் கொடுத்த முதல் புகார் மனு என்று உள்ளது என்றால் ?

ப: அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

கே: என்னால் பெறப்பட்ட முதல் புகாரிலும் அடுத்ததாக பெறப்பட்டுள்ள புகாரிலும் வெவ்வேறான தகவல்கள் உள்ளன என்றால்?

ப: நான் பெற்ற இரு ஆவணங்களிலும் 01.07.2015 தேதியிட்ட கோவிந்தசாமியின் கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ள 16 வது வரிசையில் உள்ள புகாரிலும் FIR 158/2015–ல் உள்ள புகாரிலும் உள்ள தகவல்கள் வெவ்வேறாக இருக்கின்றன.

கே: 27.06.2015 அன்று எனக்கு வந்த CJM உத்தரவில் இணைக்கப்பட்டுள்ள வாதி புகாரின் தேதி உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: எனக்கு CJM உத்தரவிட்ட கோப்பில் ஆய்வாளர் கோவிந்தசாமி எழுதிய கடிதத்தில் இறந்த ஷமீல் பாஷா முதலில் ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்ட தகவல் உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: CJM அனுப்பிய உத்தரவில் சில இணைப்புகள் இருந்தனவா என்றால் ?

ப: இருந்தன.

கே: அதில் கோவிந்தசாமி ஆய்வாளர் கொடுத்த அறிக்கையோ கடிதமோ இருந்ததா என்றால்?

ப: இருந்தது. அந்த ஆவணம் எ.த.சா.ஆ.8. அதில் உள்ள விஷயங்களை பொருத்து திரு.கோவிந்தசாமி அவர்களைத்தான் கேட்க வேண்டும்.

கே: இந்த வழக்கு Custodial Death–ஆ என்றால் ?

ப: CJM உத்தரவிற்கு இணங்க நான் விசாரணை செய்தேன். இறுதி அறிக்கையை நான் தரவில்லை. அதற்குள்ளாக நான் பணி மாறுதல் அடைந்துவிட்டேன்.

கே: ஒரு காவல் துறை விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு நபரை அவருடைய உறவினர்கள் நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன் என்று எழுதிக்கொடுத்துவிட்டு மீண்டும் தேவைப்படின் ஒப்படைக்கிறேன் என்று சென்ற பின்னர் அந்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நபரை அவர்களே மருத்துவமனையில் சேர்க்கும் பட்சத்தில் பின்னிட்டு அவருக்கு இறப்பு ஏற்படின் அது Custodial Death ஆகுமா என்றால் ?

ப: ஒரு யூகத்தின் அடிப்படையிலான கேள்வி என்பதால் அது குறித்து நான் பதிலளிக்க முடியாது.

கே: மனித உரிமைகள் ஆணையத்திலிருந்து 03.10.2013 அன்று வெளியிடப்பட்ட "Guidelines for conducting Magisterial enquiry in case of death in custody or in course of Police Action" அதில் உள்ளவாறு தாங்கள் விசாரணை செய்தீர்களா?

ப: எந்த ஆவணம் என்று குறிப்பிட்டு கேட்டால் பதில் சொல்ல இயலும்.

கே: பொது நாட்குறிப்பேட்டின் பதிவுகளை பார்த்தீர்களா?

ப: தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் செயல்முறை ஆணை 27.06.2015 நண்பகல் 12.20 மணிக்க பெறப்பட்டு மாலை 04.15 மணிக்கு சென்னை இராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு சென்றதால் அதனை பார்வையிடும் வாய்ப்பு இல்லை.

கே: ஆம்பூர் மருத்துவமனை, வேலூர் மருத்துவமனை, இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை ஆகிய மருத்துவமனைகளில் ஷமீல் பாஷா சிகிச்சை பெற்ற மருத்துவ ஆவணங்களும் மற்றும் MLC report –ஐயும் பார்வையிட்டேனா ?

ப: பிரேத விசாரணை செய்ய வேண்டும் என்பதால் நேரடியாக மருத்துவமனைக்கு நான் சென்றுவிட்டேன்.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளராக இருந்த கோவிந்தசாமி அவர்கள் செய்த சட்டப்படியான தவறுகளையும் பிழைகளையும் குறித்து ஏதாவது அறிக்கை சமர்ப்பித்தீர்களா ?

ப: நான் எந்த அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை.

கே: பிரேத விசாரணை அறிக்கையில் பத்தி 9–ல் இறப்பிற்கான வெளிப்படையான காரணம் என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட சங்கதிகள் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது மேலும் காவல் துறையினருக்கு சாதகமாக அமைய வேண்டும் என்பதற்காக அந்த குறிப்பிட்ட வாசங்களை எழுதியிருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: உங்களால் பதிவு செய்யப்பட்ட சான்று நடுவர்கள் இறந்துபோன ஷமீல் பாஷாவின் உறவினர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: அவர்கள் எந்த இடத்திலேயும் (ஷமீல் பாஷாவை தவிற) பங்களாவில் வைத்து அடித்ததாக கூறவில்லை என்றால் ?

ப: சரியல்ல.

கே: ஷமீல் பாஷாவை தவிற வேறு யாரும் சொல்லவில்லை நீங்கள் படிக்காமல் சொல்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: நான் பதிந்த சாட்சிகளின் வாக்குமூலத்தில் அனைத்து பக்கங்களிலும் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் ?

ப: அது தேவையில்லை. கடைசி பக்கத்தில் போட்டால் போதும்.

கே: தங்களால் எழுதப்பட்ட வாக்குமூலங்களில் திரு.பாஷா, ஹுமாயூன், செந்தாமரைச்செல்வி "படிக்கக் கேட்டேன் சரியாக இருந்தது" என்ற வாசம் இல்லை என்றால்?

ப: சரிதான். ஆனால் அவர்க்ள படித்து பார்த்து சரியாக இருந்தது என்றுதான் கையெழுத்து போட்டார்கள்.

கே: தங்களால் எழுதப்பட்ட ஹுமாயூன், ஷாஜஹான் வாக்குமூலங்களில் படித்துப் பார்த்து தெரிந்துக்கொண்டதாக எழுதப்பட்டுள்ள வாசங்கள் தங்களால் எழுதப்படவில்லை வெவ்வேறு நபர்கள் எழுதியிருக்கிறார்கள் என்றால்?

ப: அது என்னுடையது அல்ல. சாட்சிகள் எழுதியிருக்கலாம்.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

CJM உடனடியாக உடல்கூறாய்வு செய்யும் இராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு போகுமாறு உத்தரவிடும்போது மனித உரிமைகள் ஆணையத்திலிருந்து அனுப்பப்பட்ட உத்தரவை கடைப்பிடித்திருந்தால் இது போல நடந்திருக்காது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.45 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.05 18:25:24 +0530